DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | STC NO.10/2025 |
| Deposition of witness | : | P.W.1 |
| Name | : | பாலமுருகன் |
| Father’s /Husband Name | : | சிவானந்தம் |
| Village | : | சித்தாடி |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 4For enq7 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 17th day April 2026.
Accused Present.

**குறுக்கு விசாரணை:-**

கடந்த 01.07.2024 க்கு முன்பு எனக்கும் எதிரிக்கும் பிரச்சனைஇருந்ததா என்றால் இல்லை. எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் நானும் எனது நண்பரும் s. புதுர் கிராமத்தில் வைத்திருந்த மருந்தகத்தில் எதிரியின் மகன் வேலைப்பார்த்து வந்தார் அதன் மூலம் எதிரி எனக்கு பழக்கம். எனது நண்பரின் பெயர் என்னவென்றால் மதுசூதனன் ஆகும். யார் பெயரில் மேற்படி மருந்தகம் உரிமம்பெற்று இயங்கி வந்தது என்றால் எனது நண்பர் மதுசூதனன் பெயரில் குத்தகைக்கு எடுக்கப்பட்டு உரிமம் பெற்று வந்தார். மருந்தகத்தை எனது நண்பர் நடத்தி வந்தாரா அல்லது நானும் எனது நண்பரும் கூட்டு பங்குதாரர்களாக நடத்தி வந்தோமா என்றால் கூட்டு பங்குதாரர்களாக நடத்தி வந்தோம். அதற்கான கூட்டு பங்குதாரர் ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம். கற்பகம் யார் என்றால் எதிரியின் மகனின் மனைவி ஆவார். மருந்தகத்தின் உரிமம் கற்பகம் பெயரில் உள்ளது என்றால் இல்லை. எதிரி கதவு எண் 36/8 ல் வசித்து வந்ததாக யார் கூறினார் என்றால் எதிரிதான் கூறினார். எதிரியின் வீட்டிற்கு நான் சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். கதவு எண் 36/8 முகவரிக்கு தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனப்பினேன் என்றால் சரிதான். நான் முதல் முறை அனுப்பிய அறிவிப்பை எதிரி பெற்றுகொண்டாரா என்றால் பெற்றுகொள்ளவில்லை. கதவு எண் 36/8 என்பது எதிரியின் முகவரி இல்லை என்றால சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பை எனது செல்வாக்கை பயன்படுத்தி தபால்

அலுவலத்தின் டெலிவரி ஏஜெண்டிடம் தபாலை பெற மறுப்பதாக திரும்ப அனுப்ப கேட்டுக்கொண்டதன் பேரில் ம.சா.ஆ 4 திரும்ப அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பை சரியான முகவரிக்கு நான் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் உரிய காலத்தில் எதிரியால் பதில் அனுப்ப முடியவில்லை என்றால் சரியல்ல. கடந்த 13.06.2024 காலை 10.00 மணியளவில் எதிரியும் அவரது தகப்பனாரும் சிறிய அறையில் மாத்தி கிராம பண்ணை தோட்டத்தில் தங்கியிருந்தபோது நானும் எனது நண்பர் மதுசூதனனும் மற்றும் இதர மூன்று நபர்களும் அந்த இடத்திற்கு அத்துமீறி உள்ளே நுழைந்து எதிரியையும் எதிரி தந்தையையும் மிரட்டி அங்கிருந்த காசோலைகளை எடுத்து எதிரி விருப்பத்திற்கு மாறாக கையொப்பம் பெற்றும் முத்திரைதாளில் கையொப்பம் பெற்றதாக எதிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விசாரணை நடைபெற்றதா என்றால் இல்லை. மேற்படி புகாருக்கு 02.07.2024 அன்று கும்பகோணம் மேற்கு காவல் நிலையத்தில் விசாரணை நடைபெற்றது என்றால் சரியல்ல. எனது நண்பர் மதுசூதனன் விசாரணையில் ஆஜராகி கையொப்பம் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. கடந்த 13.06.2024 ம் தேதி பிற்பகல் நானும் எனது நண்பர் மதுசூதனன் மற்றும் இதர மூன்று நபர்கள் அத்துமீறி நுழைந்த எதிரியின் மகனை அடித்து அங்கிருந்த பொருட்கள் மற்றும் ஆவணங்களை எடுத்து சென்று விட்டோம் என்றால் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை. அது தொடர்பாக கற்பகம் என்பவர் எங்கள் மீது திருநீலக்குடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் என்மீது எதுவும் புகார் கொடுக்கவில்லை. சித்தாடி பாலமுருகன் நான் என்றால் சரிதான். இந்த பிரச்சனையிலிருந்து தப்பிப்பதற்காக எதிரியின் மகன் செந்தில்ராஜன் மீது மருந்தகத்தை எரித்து விட்டதாக திருநீலக்குடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அந்த புகாரை விசாரணையில் நான் கலந்துகொண்டேன் என்றாலும் சரியல்ல. நான் எனது புகாரில் எந்த தேதியில் எதிரி என்னிடம் கடன் கேட்டார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எதிரிக்கு ரூ. 2,00,000/- கடன்கொடுத்ததை காட்டும் வகையில் வேறு எதுவும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. எனக்கு எத்தனை வங்கியில் வங்கி கணக்கு உள்ளது என்றால் மூன்று வங்கியில் (SBI Kodavasal Branch, CUB Kodavasal Branch, Pandiyan Grama Bank, Kodavasal Branch) வங்கி கணக்கு உள்ளது. கடந்த ஜனவரி 2024 முதல் டிசம்பர் 2024 வரை வங்கி கணக்கில் ஸ்டேட்மண்ட்டை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது வங்கி கணக்கில் ரூ.2,00,000/- தொகை இருந்ததை காட்டும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரிக்கு வங்கி மூலமாக பணப்பரிவர்தனை எதுவும் செய்தேனா என்றால் இல்லை. நான் வருமான வரி தணிக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால செய்துள்ளேன். நான் 2023 மற்றும் 2024 ஆண்டிற்கான வருமான வரி

தணிக்கையை (IT return) நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்யஇயலுமா என்றால் இயலும். எனது வருமான வரி தணிக்கையில் எதிரிக்கு கடன் கொடுத்ததை காட்டியுள்ளேனா என்றால் கடன் கொடுத்தாக காட்டியுள்ளேன். எதிரியின் பெயர் குறிப்பிட்டு காட்டவில்லை Out standing என காட்டியுள்ளேன். எத்தனை நபர்கள் என்று காட்டியுள்ளேனா என்றால் அவ்வாறு காட்டவில்லை. நான் எனது இதர கடன்களை தணிக்கையில் குறிப்பிட்டு விட்டு தற்போது வழக்கிற்காகஎதிரிக்கு கொடுத்த கடன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் எதிரிக்கும் 13.06.2024 அன்று பிரச்சனை துவங்கிவிட்டது என்றும் அதன் பின்னிட்டு கொடுக்கல் வாங்கல் இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 ஆவணத்தில் எதிரியின் கையொப்பம் கருப்பு மையில் போடப்பட்டுள்ளது என்றாலும் எனது பெயர் மற்றும் 2 இலட்சம் தொகை எண்ணாலும் எழுத்தாலும் மற்றும் காசோலை தேதி ஆகியவைகள் நீல மை பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலையில் எனது பெயர், தொகை மற்றும் தேதி எதிரியால் பூர்த்திசெய்யப்படவில்லை என்றால் சரிதான். எதிரியை மிரட்டி எடுத்துசென்ற காசோலையை இவ்வழக்கிற்கு தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். வட்டிக்கு பணம் கொடுப்பேனா என்றால் இல்லை. எனது வருமான வரி தணிக்கையில் (IT return) எவ்வளவு தொகை out standing என்று காட்டியுள்ளேன் என்றால் தற்போது நினைவில்லை. நான் சொல்வது போல் எந்தவொரு தொகையும் எதிரிக்கு கொடுக்கவில்லை என்றாலும் எதிரி என்னிடம் யாதொரு தொகையும் கடனாக வாங்கவில்லை என்றாலும் மேற்படி தொகை சட்டப்படியான தொகை இல்லை என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றாலும் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.17 12:34:21 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.